Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 330

சனிக்கிழமை
22 ஒக்ரோபர் 2022

ஐப்பசி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50




## 'ஹைஏஸ்' வாகனம் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஒக். 22
காங்கேசன்துறை - மாவிட்டபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அருகாக சென்றுகொண்டிருந்த 'ஹைஏஸ்' ரக வாகனம், திடீரென தீப்பற்றி எரிந்து நாசமானது. இந்தச் சம்பவம் நேற்று இரவு நடைபெற்றது.

சாரதி வாகனத்தில் இருந்து பாய்ந்ததால் அவர் சிறு சிராய்ப்புக் காயங்களுடன் உயிர் தப்பினார். காங்கேசன்துறைக் கடற்படைதீயை உடனடியாக அணைக்க முற்பட்டபோதிலும் அந்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. விபத்தில் வாகனம் 10 ▸

# நிறைவேறியது '22'

கொழும்பு, ஒக்ரோபர் 22

**மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தின் விளைவாக, அரசமைப்புக்கான 22ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நேற்று அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.** 11 ▸

## 22 நிறைவேற்றப்பட்டமை இளைஞர்களின் வெற்றியே!

### சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 22
அரசமைப்பின் 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமைக்கான முழுமையான உரிமைகளும் மரியாதைகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கும் ஒட்டுமொத்த பிரஜைகளுக்கும் சேர வேண்டியவை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 22ஆவது திருத்த விவாதத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் 11 ▸

## '13' இருக்கும் வரை நிறைவேற்றதிகாரம் தேவை

### எதிர்த்து வாக்களித்த வீரசேகர சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 22
அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்துக்கு எதிராக பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர வாக்களித்தார். 22ஆவது திருத்தத்தை 10 ▸

## 22 மீதான வாக்கெடுப்பை பஸில் அணி புறக்கணிப்பு

கொழும்பு, ஒக். 22
அரசமைப்பின் 22ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறி இருந்தாலும், பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான பஸில் ராஜபக்சவின் நெருங்கிய சகாக்கள் வாக்கெடுப்பில் 11 ▸

## இந்திய இராணுவத்தின் போதனாப் படுகொலை!



### 35ஆவது நினைவுதினம் நேற்று

யாழ்ப்பாணம், ஒக். 22
இந்திய இராணுவத்தால் யாழ். போதனா மருத்துவமனையில் படுகொலை செய்யப்பட்டோரின் 35ஆவது நினைவுதினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்திய அமைதிப்படை என்ற போர்வையில் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட இந்திய இராணுவத்தினர் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ▸

## 22க்கு ஆதரவாக நேற்று கூட்டமைப்பு வாக்களிப்பு

### நழுவினார் சுமந்திரன்

கொழும்பு, ஒக். 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக நேற்று வாக்களித்தனர்.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டம் 178 மேலதிக வாக்குகளால் நேற்று 11 ▸

## திருத்தங்கள் வேண்டாம்; அரசமைப்பை மாற்றுக

### அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்து

கொழும்பு, ஒக். 22
நாட்டின் பொருளாதார மற்றும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், பொருத்தமான அம்சங் 11 ▸

## 9 அரசியல்கைதிகள் நேற்று விடுதலை!

### 8 பேருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு

விரிவு - பக். 11



## மூத்த எழுத்தாளர் - தெளிவத்தை ஜோசப் நேற்று மறைவு

யாழ்ப்பாணம், ஒக். 22
மூத்த எழுத்தாளர் 'சாகித்திய ரத்னா' தெளிவத்தை ஜோசப் (வயது - 88) நேற்றுக் காலை காலமானார்.

எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் நீண்டகாலமாக உடல் சுகவீனமுற்றிருந்தார். இந்த நிலையில் நேற்றுக் 09 ▸

### இருவேறு கொள்ளைகள்

## ஹெரோய்னுக்கு அடிமையான நான்கு பேர் நேற்றுக் கைது!

விரிவு - பக். 09

## மாணவனிடம் போதைப்பாக்கு விசாரணைகளுக்கு ஏற்பாடு!

கையும்மெய்யுமாக பிடிபட்ட அவர் கையை அறுத்ததால் மருத்துவமனையில்

விரிவு - பக். 09

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்., ஒக். 22
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் - கட்டுடைப் பகுதியில் 30 மில்லிகிராம் ஹெரோய்னுடன் நேற்றுமுன்தினம் மாலை இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 10 ▸

### சிறையிலுள்ள மருத்துவரான

## சிவரூபனின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உத்தரவு!

கிளிநொச்சி, ஒக். 22
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நியூமகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 ▸

### பேருந்தில் பெண்களிடம்

## அலைபேசி அபகரிக்கும் கும்பலைச் சேர்ந்தவர் கைது!

விரிவு - பக். 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்ஸில் பயணித்த யுவதியை

# பிளேட்டால் வெட்டியவர் பொலிஸில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

பேருந்தில் பயணித்த யுவதி ஒருவரின் கையை பிளேட்டால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை எழுதுமட்டுவாழ் பொலிஸ் காவலரணில் சகபயணிகள் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற பேருந்தில் இடம்பெற்றுள்ளது.

சனநெருக்கடியைப் பயன்படுத்தி தனக்கு முன்னால் நின்ற யுவதியை பிளேட்டினால் குறித்த இளைஞர் வெட்டிக் காயப்படுத்தியுள்ளார். வெட்டுக்காயத்துக்கு இலக்கான யுவதி சத்தமிடவே வெட்டுக்காயத்தை ஏற்படுத்திய இளைஞனை இனங்கண்டு சகபயணிகள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.


சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-9)

# 24 மணி நேரம் காய்ச்சல் நீடிப்பின் மருத்துவமனையை உடன் அணுகுக!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 22

**நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 24 மணிநேரத்துக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடன் மருத்துவரை அணுகுமாறு மருத்துவர்களால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**




இதுதொடர்பில் டெங்குநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவிக்கையில்,

தற்போது பெய்துவரும் பருவப்பெயர்ச்சி மழை காரணமாக நுளம்புகள் பெருகும் அபாய முண்டு.

அடையாளம் காணப்பட்ட 31 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் கொழும்பு அடங்கலாக 10 பிரதேசங்கள் டெங்கு அனர்த்த வலயங்களாக இனம்காணப்பட்டுள்ளன.

எனவே, ஒருவருக்கு 24 மணிநேரத்துக்கு மேலாக காய்ச்சல் நீடித்தால் உடன் மருத்துவ மனையை நாடவேண்டும்.

இதேவேளை, நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவும் சளிக்காய்ச்சல் ஏற்படும் வாய்ப்பும் காணப்படுகிறது.

சளிக்காய்ச்சல் பீடிக்கப்பட்டவர்களும் உடல் நிலை தொடர்பில் தீவிர அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

# நாட்டை மீட்டெடுக்கும் ஒரே தெரிவு 'ஐ.எம்.எப்.'

## மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 22

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியமே இப்போது எம்முன்னுள்ள ஒரே தெரிவு என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்கவுடனான நேர்காணலின்போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

முற்றிலும் சரிந்த ஆபத்தான முறையில் அந்நிய கையிருப்பு குறைவாகவுள்ள ஒருநாட்டை மீட்டெடுப்பது எளிதான காரியமல்ல.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று நாம் இந்தக் கடினமான சூழ்நிலையை தவிர்த்திருக்கலாம்.

தற்போது 80 வீத மறைமுக வரி மற்றும் 20 வீத நேரடி வரி முறையே 60 வீத மற்றும் 40 வீதமாக மாற்றப்பட வேண்டும்.

மேலும், குறைந்த வருமானம் பெறும் குழுக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, குறைந்த பட்சம் ஒரு வருடத்துக்கு வரி முறையை தொடர வேண்டும் - என்றார். (ச-இ)

# பிரான்ஸ் ரியூனியன் தீவில் 17 இலங்கையர்கள் தஞ்சம்

கொழும்பு, ஒக். 22

சட்டவிரோதமாக மீன்பிடிப் படகு மூலம் 17 இலங்கையர்கள் இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள பிரான்ஸின் ஆளுகைக்கு உட்பட்ட ரியூனியன் தீவை நேற்றுமுன்தினம் சென்றடைந்துள்ளனர்.

3 பெண்கள், ஒரு குழந்தை உட்பட 17 பேரே இவ்வாறு படகு மூலம் ரியூனியன் தீவை சென்றடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் அந்தநாட்டு கடற்படை அதிகாரிகளால் மீட்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த செப்ரெம்பர் மாதம் இரண்டு பெண்கள்,ஆறு குழந்தைகள் உட்பட 46 பேர் குறித்த தீவைச் சென்றடைந்தனர்.

அவர்களில் 39 பேர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் ஏனைய 7 பேரும் விமானம் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# டிப்பர் – ஓட்டோ விபத்து தாய், மகன் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 22

டிப்பர் - ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் தாயும், மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் கொழும்பு குருநாகல் பிரதான வீதியின் அலவ்வ, வலகும்புர பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய பெண்ணும், அவரது 18 வயது மகனும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஓட்டோவைச் செலுத்தி வந்த உயிரிழந்த பெண்ணின் கணவரும் மற்றுமொரு மகனும் படுகாயமடைந்த நிலையில் பொல்கஹவெல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகன சாரதி கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-14-22)

# தம்பகாமத்திலுள்ள அரச காணிகள் பக்கச்சார்பாக வழங்கப்படுகின்றனவா?

## அந்தப்பகுதி மக்கள் கேள்வி

கிளிநொச்சி, ஒக். 22

பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்துக்குட்பட்ட தம்பகாமம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள அரச காணிகள் பக்கச்சார்பாக பகிர்ந்தளிக்கப்படுகின்றதா? என்று அந்தப்பகுதி கிராம மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்துக்குட்பட்ட தம்பகாமம் பகுதியில் சில அரச காணிகள் இருந்துள்ளன. அந்தக் காணிகளில் அந்தப்பகுதி மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக காணிகளில் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதனை கிராம அலுவலர் ஊடாக பிரதேசசெயலகத்துக்குத் தெரியப்படுத்தி காணி துப்புரவுப் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்டு வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

ஆனால், அந்தக் காணிக்கு முன்னுள்ள காணிகளைத் துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகும் ஒரு சிலருக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வேறு கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள அரச காணிகளை அந்தந்த கிராம மக்களுக்கு விவசாயம் மேற்கொள்ள பிரதேசசெயலர் அனுமதி வழங்கி அனுமதிப் பத்திரமும் வழங்கப்பட்டது. ஆனால், தம்பகாம கிராமத்தில் சில மக்களுக்கு மாத்திரம் அரச காணி விவசாயத்துக்கு என வழங்கப்பட்டுள்ளமைக்கு பிரதேச செயலகம் பக்கச்சார்பாக செயற்படுகின்றதா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, தம்பகாம கிராம அலுவலர் பிரிவிலுள்ள அரச காணியை விவசாய நடவடிக்கைகளுக்காக கிராம மக்களுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்குமாறு பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலரைத் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அது பயனளிக்கவில்லை. (ஒ-14-113)

# மூளாயில் திருட்டு; சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 22

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் பகுதியில் உள்ள வீடொன்றில் புகுந்து இலத்திரனியல் உபகரணங்கள் திருடிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூளாயிலுள்ள வீடொன்றிலிருந்த 2 தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளிட்ட மேலும் பல இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டன என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டைப் பொலிஸார், மூளாய் வேரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரை நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர். அத்துடன் சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியக் கல்வி நிறுவகம் வருமானமீட்டும் தளமா?

### கல்விமாணி கற்கைநெறி கட்டண உயர்வுக்கு ஆசிரிய சேவை சங்கம் கண்டனம்



யாழ்ப்பாணம், ஒக். 22

தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படுகின்ற கல்விமாணிப் பாடநெறிக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமையானது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதொன்று.

வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தினூடாக இதற்குரிய ஒதுக்கீடுகளை வழங்காமல் ஆசிரியர்களின் மனப்பாங்கு விருத்திக்கு கேடு விளைவிக்கின்ற வகையில் கட்டண உயர்வை அரசாங்கம் மேற்கொள்கிறது.

-இவ்வாறு இலங்கை ஆசிரிய சேவை சங்கம் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு கல்வி அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கை ஆசிரிய சேவை சங்க உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தேசியக் கல்வி நிறுவகத்தால் நடத்தப்படுகின்ற கல்விமாணிப் பாடநெறியின் மூன்று வருடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பாடநெறியில் இதுவரை நடைபெற்ற முழுமையான பாடநெறிக் கட்டணமாக 84 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒருலட்சத்து 52ஆயிரம் ரூபாவரை அறவிடப்பட்டது.

இந்தநிலையில் அதனை 68 ஆயிரம் ரூபா வரையான வித்தியாசத்தில் உயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதொன்று.

அவ்வப்போது ஆட்சிபீடம் ஏறும் அரசாங்கங்கள் தேசியக் கல்வி நிறுவகத்தை நேரடியாக வருமானத்தை ஈட்டும் ஒரு பொறிமுறையாகக் கையாள்கிறது.

வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தினூடாக இதற்குரிய ஒதுக்கீடுகளை வழங்காமல் இலவசக் கல்விச் சட்ட மூலத்துக்கும், ஆசிரியர்களின் மனப்பாங்கு விருத்திக்கும் கேடு விளைவிக்கின்ற செயலைச் செய்கின்றது.


இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தினூடாக உரிய ஒதுக்கீட்டை ஒதுக்கி பாடநெறியை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

(ச-159)

### சிறுபோக அறுவடை

# நெல் கொள்வனவுக்கு இதுவரை நிதியில்லை

### விவசாய அமைச்சு கைவிரிப்பு



**கொழும்பு, ஒக். 22**

**சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல் இதுவரை கொள்வனவு செய்யப்படவில்லை. இதற்குரிய நிதி அரச வங்கிகளிடமிருந்து கிடைக்காமையே காரணம் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹண புஷ்பகுமார தெரிவிக்கையில்,

வங்கிகளிடமிருந்து நிதி கிடைக்கும் காலம் இதுவரை அறிவிக்கப்படவில்லை. கடனுக்கான வட்டி 28 வீதம் அறிவிடப்படும் என வங்கிகளூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், வட்டி வீதம் அதிகம் என்பதால் அதனை குறைத்துக் கொள்வது தொடர்பில் வங்கிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

நிதி கிடைக்கப்பெற்றதும் சிறுபோகத்தில் ஒரு கிலோகிராம் நாட்டரிசி நெல் 120 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் சம்பா நெல் 125 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் கீரி சம்பா நெல் 130 ரூபாவுக்கும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

### கொழும்புக்கு வரும் சீனக் கப்பல்

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பிடித்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் சிதைவுகளை மீட்பதற்காக சீனக்கப்பல் ஒன்று இலங்கைக் கடற்பகுதியை வந்தடையவுள்ளது என கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மே மாதம் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றி எரிந்தது. அந்தக் கப்பலிலிருந்த கொள்கலன்கள் உட்பட சுமார் ஆயிரத்து 700 மெற்றிக்தொன் சிதைவுகள் கடலில் கலந்தன.

வருகைதரவுள்ள சீனக் கப்பல் சில தினங்கள் இலங்கைக் கடற்பரப்பில் தங்கியிருந்து சிதைவுகளை அகற்றவுள்ளது என கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச-இ)

# திருத்தச் சட்டங்களால் நாடு ஒருபோதும் திருந்தாது

கொழும்பு, ஒக். 22

மக்கள் மனங்களை வென்ற புதிய அரசமைப்பை உருவாக்காதவரை திருத்தங்கள் ஒருபோதும் இந்த நாட்டைத் திருத்தாது - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 22ஆவது திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தின் போது, நாடாளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு மொழி எனில் ஒரு நாடு. ஒரு மொழி எனில் இரண்டு நாடு என்ற கொல்வின் ஆர்.டி.சில்வாவின் தீர்க்கதரிசனத்தைப் புறந்தள்ளி, போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இனவெறிதான், இன்று இந்த நாட்டின் அதிபயங்கர நிலைக்கு அடிகோலியது.

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பும், அவரது இனவாத நிலைப்பாடுமே இந்த நாட்டில் ஒரு பெரும் இரத்தக்களரியை ஏற்படுத்தியிருந்தது. அந்த அரசமைப்பு உருவாக்கத்தில் தந்தை செல்வாவின் மருமகனான ஜே.வில்சன் முக்கிய பங்காற்றியிருந்தார் என்று திருத்தச் சட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அந்த யாப்புருவாக்கத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் இணைந்து செயற்பட்டதையிட்டு தான் மானசீகமாக மனம் வருந்துகிறேன் என ஜே.வில்சன் ஒரு நூலையே எழுதி வெளியிட்டுள்ளார் என்பதை அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நாடு அரசியல் உறுதிப்பாடு இல்லாமல் இருப்பதற்கும், பொருளாதார ரீதியாக அதலபாதாளத்திலிருப்பதற்கும் இந்த நாட்டில் புரையோடிக் போயிருக்கும் இனப்பிரச்சினையும், அதன்வழி நிகழ்ந்தேறிய பெரும் போரும்தான் முதன்மைக்காரணம். ஆனால் அந்தப் போர் முடிவுற்று 12 ஆண்டுகளைக் கடந்தும் போருக்கான காரணம் குறித்தோ, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் குறித்தோ எந்தச் சிங்களத் தலைவர்களும் செவிசாய்க்கவில்லை.

போரை வென்ற, சர்வ வல்லமை பொருந்திய அரசராக சிங்கள மக்களால் கொண்டாடப்பட்ட மஹிந்த ராஜபக்ச நினைத்திருந்தால், தனக்கிருந்த பெரும்பான்மையை வைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்கியிருக்கலாம். அந்தச் சிந்தனையற்றிருந்த அவரது இனவெறிதான் அவரை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கின்றது.

மக்கள் மனங்களை வென்ற புதிய அரசமைப்பை உருவாக்காத வரை திருத்தங்கள் ஒருபோதும் இந்த நாட்டைத் திருத்தாது. குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, நாவற்குழி, மயிலிட்டி என்று சிங்களவர்களின் காலடித்தடங்களே படாத இடங்களில் எல்லாம் எதற்காக விகாரை அமைக்கின்றீர்கள்?' என்று கேள்வி எழுப்பினார்.

'லலித் அத்துலத் முதலி போன்றவர்களின் இனவெறி இந்த நாட்டையே சீரழித்தது. காமினி திஸாநாயக்கா போன்றோரின் இனத்துவேசம்தான் யாழ்ப்பாணம் நூலக எரிப்புக்குக் காரணமானது' என்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கருத்திலே குறுக்கிட்ட காமினி திஸாநாய்க்கவின் மகன் மயந்த திஸாநாயக்கா, தனது தந்தை யாழ். நூலகத்தை எரிக்கவில்லை என்று தெரிவித்ததை உடனடியாகவே மறுத்த சிறீதரன், உங்கள் தந்தையே யாழ்.நூலக எரிப்பின் பிரதான சூத்திரதாரி என மீள வலியுறுத்தியதோடு, சபைக்கு தலைமை தாங்கும் உறுப்பினராக உள்ள நீங்கள், அக்கிராசனத்தைப் பயன்படுத்தி இந்த நாட்டில் மீள இனவாதத்தை விதைக்காதீர்கள் என அவரை நேரடியாகச் சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-22)

### இராணுவப் பயிற்சிக்கு

# கட்டணத்தை செலுத்தக் கூட இலங்கையிடம் பணமில்லை

### இந்திய மத்திய பாதுகாப்பு இணை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 22

பயிற்சி பெறுவதற்காக இந்தியா வந்துள்ள சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்கு பெயரளவு கட்டணம் செலுத்தக்கூட அந்த நாட்டு அரசாங்கத்தால் முடியவில்லை என இந்திய மத்திய பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை இணை அமைச்சர் அஜய் பட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அதன் காரணமாக சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் இந்தியாவில் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகளுக்கு பெயரளவிலான கட்டணத்தை செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், அந்தக் கட்டணத்தையே சிறிலங்கா அரசாங்கத்தால் செலுத்த முடியவில்லை.

ஒரு நாட்டின் நிர்வாகம், சிறப்பாக செயற்படாவிடின் அது சிறிலங்காவைப்போன்று வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுவிடும். சிறப்பான நிர்வாகமின்மையாலேயே ஏனைய நாடுகளிடம் அவர்கள் உதவி கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதில் வேதனையான விடயம் பயிற்சிக்காக இந்தியா வந்த இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பெயரளவு கட்டணம் கூட செலுத்த முடியவில்லை.

பணம் இருக்கும்போது அடுத்த ஆண்டு செலுத்து[illegible] இந்த ஆண்டு[illegible] மைக்க வேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயலாபப் பின்புலத்திலேயே இடமாற்றம் கோரிப் போராட்டம்

## ஆராய்ந்து தீர்வு வழங்குமாறு மற்றொரு தரப்பினர் போராட்டம்

**கிளிநொச்சி, ஒக். 22**

**கண்டாவளை பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் பணியாற்றிவரும் கிராமஅலுவலர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகிய இருவரையும் இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரி கடந்த புதன்கிழமை கிராமஅலுவலர் அலுவலகத்துக்கு முன்பாக மற்றொரு தரப்பினர் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.**



கண்டாவளை பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் பணியாற்றிவரும் கிராமஅலுவலர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகிய இருவரும் மக்களிடத்தே பாரபட்சம் காட்டுகின்றனர். அவர்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்மடுநகர், சம்புக்குளம் கிராம மக்களால் கடந்த 16ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட மற்றொரு தரப்பினர், குறித்த போராட்டம் அரசியல் சுயலாபம் கருதியே முன்னெடுக்கப்பட்டது.

அதில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. கொரோனாக் காலத்திலும் இரவு பகலின்றி சேவையாற்றிய குறித்த அலுவலர்கள் தற்போதும் பாரபட்சமின்றியே மக்களுக்கு சேவை வழங்குகின்றனர். அவர்கள் இடமாற்றம் செய்யப்படலாகாது.

இதுதொடர்பில் பாரபட்சமின்றி விசாரணை மேற்கொண்டு உரிய தீர்வை பிரதேச செயலர் வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். (ச-214)

# சாவகச்சேரியில் தொடர் திருட்டு முறைப்பாடளித்தும் பயனில்லை

## அந்தப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, ஒக். 22

சாவகச்சேரி நகரப் பகுதியில் அண்மைக்காலமாக சைக்கிள்கள் திருடப்படுகின்றமை அதிகரித்துள்ளது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சந்தை, வர்த்தக நிலையம், பிரதேசசெயலகம் போன்ற மக்கள் அதிகமாகக்கூடும் இடங்களில் பாதுகாப்பு நிலையங்களுக்கு வெளியே விடப்படும் சைக்கிள்களே இவ்வாறு திருடப்படுகின்றன. இந்த நிலையில் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் விடப்பட்ட சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று நடைபெற்ற வழக்குக்காக மிருசுவில் தவசிகுளத்திலிருந்து சைக்கிளில் வருகை தந்த ஒருவர் நீதிமன்ற வளாகத்தில் சைக்கிளை விட்டு உள்ளே சென்றுள்ளார்.

வழக்கு முடிந்து வெளியே வந்தபோது சைக்கிள் திருடப்பட்டுள்ளதை அவதானித்தார். அதன்பின்னர் தனது சைக்கிள் திருடப்பட்டுள்ளது என்று நீதிமன்ற அதிகாரியிடம் தெரிவித்துள்ளார். நீதிமன்ற வளாகத்தில் பொலிஸார் மற்றும் நீதிமன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ள நிலையில் அங்கு விடப்பட்ட சைக்கிள் திருட்டுப் போனமை தொடர்பில் பாதிக்கப்பட்டவர் கவலை தெரிவித்தார்.

இவ்வாறே முறைப்பாடளித்தும் திருட்டு தொடர்பில் எந்தப் பயனும் கிடைக்கவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் குற்றச்சாட்டியுள்ளனர். (ஒ-14-9)

# கடும் காற்றால் முறிந்தது மரம்!

கிளிநொச்சி, ஒக். 22

கிளிநொச்சி- கணேசபுரம் பகுதியில் வீதிக்கு குறுக்கே காணப்பட்ட பல்லாண்டு பழமைவாய்ந்த அரசமரம் நேற்றுமுன்தினம் இரவு முதல் கடும் காற்றுடன் பெய்துவரும் மழையால் முறிந்து விழுந்துள்ளது. இதனால் போக்குவரத்துக்கும் தடை ஏற்பட்டது. அதனையடுத்து மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் ஒழுங்குபடுத்தலுக்கு அமைய அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் பழமைவாய்ந்த அரசமரம் வெட்டி அகற்றப்பட்டது. (ஒ-14,27)



# கூட்டங்கள் முறையாக நடைபெறுவதில்லை

## பிரதேசசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 22

வலி. தென்மேற்கு பிரதேசசபையின் குழுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படுவதில்லை என்று சபையின் உறுப்பினர்கள் சிலரால் சுட்டிக்காட்டப்பட்டது.

பிரதேசசபையின் அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

குழுக்களின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற விடயங்கள் தாமதமாகின்றன. ஆகவே அடுத்த அமர்வுக்குள் அனைத்து குழுக் கூட்டமும் கூட்டப்படவேண்டும். கூட்டம் நடத்தப்பட்டால் சபையால் முன்னெடுக்கப்படும் அனைத்து விடயங்களையும் இலகுவாக நடத்தமுடியும் என உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அதனையடுத்து கருத்துத்தெரிவித்த சபையின் மற்றுமொரு உறுப்பினர், குழுத்தலைவர்களாக இருந்து கொள்பவர்களே குழுக் கூட்டம் நடத்தவில்லை என தெரிவிப்பது நகைப்புமிக்கது எனக் கூறினார். அனைத்தையும் கருத்திற்கொண்டு கருத்துத் தெரிவித்த சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், குழுத் தலைவர்கள் நீங்களாக செயலாளருடன் கலந்தாலோசித்து கூட்டங்களை நடத்தலாம்- என்றார். (ஒ-14,125)



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வியாபாரத்தில் இருந்த தடை விலகும். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மனதில் நினைத்ததை செயற்படுத்தி மகிழ்வீர்கள். எண்ணம் நிறைவேறும்.

**இடபம்:** நீண்ட நாளாக தள்ளி வைத்த வேலையில் இன்று கவனம் செலுத்துவீர்கள். அரசு வழியிலான முயற்சியில் வெற்றி உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்:** முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த செய்தி ஒன்று வந்து சேரும். சகோதரர் வழியில் நன்மை உண்டு. தைரியமாகச் செயற்படுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைக்கு பேசித் தீர்வு காண்பீர்கள். நன்மை அதிகரிக்கும். தம்பதியருக்குள் நெருக்கம் அதிகரிக்கும். புதிய நபர்கள் அறிமுகமாவர்.

**சிம்மம்:** தொழில் ரகசியங்களை யாரிடமும் தெரிவிக்கவேண்டாம். எச்சரிக்கை அவசியம். ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளில் ஈடுபடுவீர்கள். வேலைப்பளு அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு இழுபறியாகும். யோசித்துச் செயற்பட்டாலும் திடீர் செலவு [illegible] அதிக செலவு செய்வீர்கள்.

**துலாம்:** நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வராமல் இருந்த ஒரு தொகை கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வியாபாரத்தை அபிவிருத்தி செய்யத் திட்டமிடுவீர்கள். முயற்சி நிறைவேறும். நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்காலம் குறித்த எண்ணம் மேலோங்கும்.

**தனுசு:** குடும்பத்துக்குள் உண்டான குழப்பம் விலகும். தந்தையின் ஆலோசனை நன்மை தரும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைச் சரிசெய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் அமைதி காப்பது நல்லது. முயற்சிகள் இழுபறியாகும். மற்றவர் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். அதனால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள்.

**கும்பம்:** திறமை வெளிப்படும் நாள். அக்கம் பக்கத்தினர் பாராட்டுவர். வருமானம் அதிகரிக்கும். உங்களைத் தேடி பொறுப்பு வரும். உங்கள் பலத்தை நீங்கள் அறிவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த உதவி கிடைத்து மகிழ்வீர்கள். குடும்பநிலை உயரும். விலகிச் சென்ற உறவினர் தேடி வருவர். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் தீரும். முயற்சி ஆதாயமாகும்..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நம்புங்கள் தமிழரை!

வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளில் அதிகரித்த சீனப் பிரசன்னம் தொடர்பில் இந்தியா கரிசனை கொண்டுள்ளது. சீனா கடந்த சில மாதங்களாக வடக்கு மாகாணத்தைக் குறிவைத்து தனது நகர்வுகளை முன்னெடுத்துள்ளது. வடக்கு மாகாணத்தில் தனக்குரிய கருத்துருவாக்கிகளையும் அது உருவாக்கியுள்ளது.

சீனாவின் இந்த நகர்வுகளை அடுத்து, அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவும் வடபகுதியில் தன்னை ஆழமாக நிலைநிறுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தீவுப்பகுதியில் கடலட்டைப் பண்ணை என்ற போர்வையில் சீனர்கள் உள்நுழைவது ஒன்றும் புதிதல்ல. அவர்கள் இப்போது தமிழகத்தைக் கண்காணிக்கக்கூடிய வகையில் தம்மை விரிவுபடுத்தியிருக்கின்றார்கள் என்பதுதான் இந்தியாவின் கரிசனைக்குரியதாகியுள்ளது.

கடலட்டைப் பண்ணைத் தொழில் இப்போது இலங்கை அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்படுகின்றது. போர் முடிந்த பின்னரான காலப் பகுதிகளிலிருந்து இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடலட்டைப் பண்ணை தொடர்பில் அப்போது பெரிதாக அலட்டிக்கொள்ளாத மீனவ அமைப்புக்கள் இப்போதுதான் அது தொடர்பில் 'திடீர்' கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கைத் தீவு வல்லாதிக்க சக்திகளின் வல்லரசுப் போட்டிக் களத்தில் சிக்குண்டுள்ளது. பூகோள ரீதியான அதன் அமைவிடம் பூகோள அரசியல் போட்டி மோதலுக்குள் தள்ளியுள்ளது. இதில் வடக்கு மாகாணமும் யாழ்ப்பாணமும் விதிவிலக்கு அல்ல.

இந்தியாவின் தென்முனையிலிருக்கும் தமிழகமும், இலங்கையின் வடக்கு மாகாணமும் உணர்வுபூர்வமாக ஒன்றானவை. தமிழகத்தின் இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பில் வடக்கு மாகாணத் தமிழர்களுக்கு அக்கறை இருக்கின்றது, இருக்கவே செய்யும்.

அதனால்தான் தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும், வடக்கில் சீனாவின் பிரசன்னம் தொடர்பில் இந்தியாவுக்கு ஆதரவான தமது நிலைப்பாட்டை தொடர்ச்சியாகவும் பகிரங்கமாகவும் வெளிப்படுத்தி வருகின்றார்கள். இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறைகளால், வடக்கில் ஊடுருவியுள்ள சீனர்களை வெளியேற்றவேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.

தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு என்பது பிரிக்க முடியாத ஒன்று. ஆனால், தமிழ் மக்களை கொன்றொழித்த இன அழிப்பு இறுதிப்போராக இருக்கட்டும், அதன் பின்னரான சர்வதேச அரங்குகளில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாடுகளாக இருக்கட்டும் எல்லாவற்றிலும் சீனா எடுத்த நிலைப்பாடு தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

தமிழ் மக்கள் தங்களுக்கு வேண்டாத ஒரு நாடாகவே சீனாவை நோக்குகின்றனர். ஆனால், இலங்கை அரசாங்கமோ அதற்கு மாறாக பல்வேறு இடங்களிலும் தன்னைப் பிணையெடுக்கும் 'ஆபத்பாந்தவனாகவே' சீனாவைப் பார்க்கின்றது. தனது நண்பன் என்று சொல்லி இலங்கைத் தீவு எங்கும் சீனா கால் பதிக்க அனுமதித்திருக்கின்றது. கூடவே சீனக் கடன்பொறிக்குள் சிக்கி, தீவின் கேந்திர நிலையங்களை இலங்கை அடகு வைத்திருக்கின்றது.

இங்கிருந்து சீனாவை வெளியேற்றுவதற்கு இந்தியா, இலங்கை அரசாங்கத்தை நாடியோ, அவர்களை 'தாஜா' செய்தோ பலனில்லை. பொருளாதார நெருக்கடி நேரத்தில் இந்தியா கைகொடுத்திருந்தாலும், இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை அரசாங்கம் நடந்து கொள்ளவில்லை என்பது வெள்ளிடைமலை.

இலங்கை அரசாங்கம் ஒருபோதும் சீனாவை வெளியேற்றாது என்ற நிலையில், ஆகக் குறைந்தது தனது தென்கோடியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்தியா ஈழத் தமிழர்களை முழுமையாக நம்பவேண்டும் – நம்பிக்கைவைக்க வேண்டும். கடந்த கால கசப்புக்களைக் கடந்து, தற்போதைய பூகோள சூழலில் வல்லரசுப்போட்டியில் தன்னை நிலைநிறுத்த இந்தியா முனையுமானால், ஈழத் தமிழர்களே அதன் நம்பிக்கைக்குரிய துருப்புச்சீட்டாக இருக்கமுடியும்.

இனியும் சுய அதிகாரம் அற்ற, ஈழத் தமிழர்களால் கூட இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத 13 ஆம் திருத்தம் தொடர்பில் பேசிக்கொண்டிருக்காது, ஈழத் தமிழர்களுக்கு சுயாட்சியைப் பெற்றுக்கொடுக்க இந்தியா விருப்பம்கொள்ளவேண்டும். அதன் ஊடாகவே இந்தியா தனது தென்கோடியின் பாதுகாப்பை எதிர்காலத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

நாளொரு நல்வார்த்தை

"திறமையும் வாய்ப்பும் இருந்தும்கூட அப்படிச் செய்யாமல் இருப்பவனும் சோம்பேறிதான்"

- சோக்ரட்டீஸ்




# வடக்கு மாகாணத்தில் சீனாவைக் கட்டுப்படுத்துங்கள்

## அரசாங்கத்திடம் சுரேஷ் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக். 22**

**இலங்கையின் வடக்குப் பகுதியில் சீனாவை அனுமதித்துள்ளமை மிகப் பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும். சீனாவின் வல்லாதிக்க போட்டிக்கு இலங்கையை பயன்படுத்த இடமளிக்கவேண்டாம் - இவ்வாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.**

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சீனாவுக்கு அகலமாகக் கதவுகளைத் திறந்துவிட்டு இந்தியா எனது சகோதரன் என்றும் சீனா எனது நண்பன் என்றும் கூறுவது நகைப்புக்குரியது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், சீனாவின் நடவடிக்கைகள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன. சர்வதேச தளங்களில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வரும் சீனா, வடக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதுபோன்று ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவே.

தமிழ் நாட்டின் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் சீருடை அணியாத சீன இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் அவர்கள் கடல் அட்டை பண்ணைகள் அமைத்தல்போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் எனவும் தமிழகத்துக்குள் அவர்களது ஊடுருவல் ஏற்படலாம் என்றும் அச்சம் வெளியிட்டுள்ளனர். இலங்கைக்குள் சீனாவின் ஊடுருவல் என்பது தமிழ் நாட்டை அச்சம் கொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளதாக தமிழகமே கூறும் நிலை உருவாகியுள்ளது. இது இலங்கைக்கு ஆரோக்கியமான ஒரு சூழல் அல்ல.

வடக்கு மாகாணத்துக்குள் சீனாவின் சகலவிதமான நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்தத் தவறினால் அது பெரும் பின்விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம். இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்காகவும், இலங்கையின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் சீனாவின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டியது இலங்கையின் கடமையாகும் - என்றார். (ஒ-5)

# 'இடுகம' மூடப்பட்டது

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் ஸ்தாபிக்கப்பட்ட 'செய்கடமை' (இடுகம) கொவிட் 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. 'செய்கடமை' கணக்கு கடந்த 18 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது. எனவே, இனி மேல் இந்த நிதிக்கு பொதுமக்கள் நன்கொடை வழங்க வேண்டாம் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை வழங்கப்பட்டுள்ள நன்கொடைகளில், மீதமுள்ள தொகை சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. (ஒ-14,22)

நாளை 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி 6

சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கரும்புள்ளியான் குடிதண்ணீர்த் திட்டம்

# உலக வங்கியின் நிதியொதுக்கீடு தென்பகுதிக்குக் கைமாறியதா?

### மாந்தை கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் சந்தேகம்

**முல்லைத்தீவு, ஒக். 22**

**முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்துக்குட்பட்ட கரும்புள்ளியானில் உலக வங்கியின் நிதியுதவியில் மேற்கொள்ளப்படவிருந்த குடிதண்ணீர் திட்டத்துக்கான பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இந்த நிதி ஒதுக்கீடு தென்பகுதிக்கு கைமாறிவிட்டதா? என சந்தேகம் எழுகிறது.**

இவ்வாறு மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் மகாலிங்கம் தயானந்தன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கரும்புள்ளியான் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு உலக வங்கியின் நிதியில் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், இன்றுவரை இந்தத் திட்டத்துக்கான எந்தவிதப் பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பிரதேசமக்கள் வருடந்தோறும் வறட்சிக் காலங்களில் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியாதளவு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் சிறுநீரகநோயாளர்களின் எண்ணிக்கையும் வருடந்தோறும் அதிகரித்துச் செல்கின்றது என மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

குடிதண்ணீர்த் திட்டத்தை விரைந்து ஆரம்பிக்குமாறு கடந்த வாரம் மக்கள் எம்மிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் குறித்த திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

கொழும்பு மட்ட உயரதிகாரிகளால் தென்னிலங்கைக்கு மாற்றப்பட்டு விட்டதா? என சந்தேகம் எழுகிறது.

எனவே உலக வங்கியின் அதிகாரிகள் நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேசசபையின் தவிசாளர் மா.தயானந்தன் தெரிவித்தார். (ச-214)

## கட்டடப் பணி மேற்கொள்ள விரைவு அனுமதி வழங்கல்

### காரைநகர் பிரதேசசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 22

காரைநகர் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள விரைவு அனுமதி வழங்கல் சேவையை ஆரம்பிக்க காரைநகர் பிரதேசசபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விரைவு அனுமதியை வழங்குவதற்கான சேவையை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை பிரதேசசபை தவிசாளர் க.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது காரைநகர் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டட நிர்மாணப் பணிகளை 7 நாள்களுக்கு மேற்கொள்வதற்கான விரைவு அனுமதி வழங்கல் சேவையை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

எனினும் சுகாதார மருத்துவ அதிகாரி கலந்துரையாடலில் பங்குபற்றாத நிலையில் அவருடனான சந்திப்பின் பின்னர் விரைவு அனுமதிக்கான சேவை தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச செயலக கடலோர திணைக்களம், கலாசார திணைக்களம், காரைநகர் கோட்டக் கல்விப் பணியகம், கமநலசேவை நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பட வரைஞர்கள், சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-125)



## சனி,ஞாயிறு,விடுமுறை தினங்களில் கசூரினா ஊடாகப் போக்குவரத்து

யாழ்ப்பாணம், ஒக். 22

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை உள்ளிட்ட சகல விடுமுறை தினங்களிலும் காரைநகர் கசூரினா கடற்கரை ஊடாக இ.போ.சபைக்குச் சொந்தமான 782 வழித்தட இலக்கப் பேருந்து போக்குவரத்தில் ஈடுபடும் என்று காரைநகர் பிரதேசசபைத் தவிசாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேசசபையின் தவிசாளர் க.பாலச்சந்திரன், இ.போ.ச சாலை முகாமையாளருடன் கலந்துரையாடியுள்ளார். அதற்கிணங்க கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கசூரினா ஊடான போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது.

ஒவ்வொரு சனி, ஞாயிறு மற்றும் வேறு விடுமுறை தினங்களில் காரைநகரிலிருந்து காலை 11.40 மணி, பி.ப 2 மணி, மாலை 4 மணி நேரங்களில் செல்லும் 782 வழித்தட பேருந்துகள் கசூரினா கடற்கரை ஊடாக யாழ்ப்பாணம் சென்றடையும்.

அதேபோல் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.30 மணி, காலை 10 மணி, காலை 10.30 மணி, பி.ப 2 மணி, பி.ப 3.15 மணி நேரங்களில் செல்லும் 782 வழித்தட பேருந்துகள் கசூரினா கடற்கரை ஊடாக காரைநகர் துறைமுகத்தை சென்றடையும்.

தொடர்ச்சியாக பாடசாலை விடுமுறை நாள்களிலும் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அத்துடன் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தரும் நாள்களான சனி,ஞாயிறு, மற்றைய விடுமுறை தினங்களில் தற்போது இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-14,125)

## மந்துவில் வேலக்காடுப் பகுதி அரச காணியில் மணலகழ்வு

### அதிகாரிகளால் நடவடிக்கை இல்லையென மக்கள் விசனம்

கொடிகாமம், ஒக். 22

மந்துவில் கிழக்கு வேலக்காடு குடியேற்றத்திட்டப் பகுதியிலுள்ள அரச காணியில் இரவு பகலாக பெருமளவில் மணலகழ்வு இடம்பெறுகிறது. இதுகுறித்து உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தபோதும் எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த குடியிருப்பு பகுதியிலுள்ள அரச காணிகளில் மணல் அகழ்வு இடம்பெறுவதால் மழைகாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயமுள்ளது. எமது குடியிருப்பு கிராமமே நீரில் மூழ்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதும் அரச காணிக்குள் இடம்பெறும் மணல் அகழ்வை எம்மால் தடுக்க முடியாது. கனியவள திணைக்களத்துக்கு அறிவியுங்கள் என அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே எம் குடியிருப்பு பகுதியைப் பாதுகாக்க மழைகாலம் நெருங்குவதற்கு முன் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-159)



## நிறுவுநர் நினைவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 22

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் கடந்த புதன்கிழமை கல்லூரியின் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கல்லூரி மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ஒ-14,27)

# ஆலயங்கள் மீதான ஆக்கிரமிப்பு தடுப்பது சமயத்தலைவர்களது பணி

### மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியம் வலியுறுத்து

வடக்கு - கிழக்கு பகுதிகளில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சமயத்திருத்தலங்கள் மீதான ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறை என்பவற்றிலிருந்து திருத்தலங்களைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு சமயத்தலைவர்களுக்குமுரியதாகும் என மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தினரின் ஆலோசனைக் குழுக் கூட்டம் கடந்த 17ஆம் திகதி மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் சாள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கில் குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையையும் மீறி விகாரை அமைக்கும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் பிக்குவின் உடல் தகன விவகாரம், தற்போது திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சுற்றுப்புறச்சூழல் ஆக்கிரமிப்பு என தமிழ் மக்களின் தனித்துவத்தை சீரழிப்பதற்கான பல்வேறு சதித்திட்டங்கள் தொடர்ந்து அரங்கேற்றப்படுகின்றன. இதனை முறியடிக்க ஒரு கட்டமைப்பு தமிழர் தரப்பிடம் இதுவரை இல்லை. எமது திருத்தலங்களைப் பாதுகாக்க வேண்டியது எம் சமயத் தலைவர்களின் தலையாய கடமையாகும் என சுட்டிக்காட்டப்பட்டது. (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை

**உப அலுவலகம் - மல்லாகம்**
**விண்ணப்பதாரியின் பெயர் - திரு சுப்பிரமணியம் கணேசானந்தம்**
**முகவரி - குடவத்தை, அளவெட்டி மத்தி, அளவெட்டி, யாழ்ப்பாணம்**

குறித்த ஆதனமானது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 12 டச்சு வீதி ஆதன இலக்கம் - 4/8, இல் உரிமைகோருபவர் சொந்தக்காரர் என காணப்படுகின்றது.

ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு இராமுப்பிள்ளை நமச்சிவாயம் சிவப்பிரகாசம் முகதாவில் 4517/16.05.1965 இலக்க திகிதிய உறுதியின் மூலம் தம்பிராசா ஞானசம்பந்தன் என்பவர் தம்பு வைத்தியலிங்கம் கைம்பெண் சிவபாக்கியம் என்பவருக்கு அறுதியளித்துள்ளார். தம்பு வைத்தியலிங்கம் பெண் சிவபாக்கியம் அதே நொத்தாரிசு முகதாவில் இவ்வாதனம் 1968 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11 ஆம் திகதி நிறைவேறிய 5354 ஆம் இலக்க உறுதி மூலம் தம்பிராசா ஞானசம்பந்தன் அதே நொத்தாரிசு முகதாவில் 1968.04.24 ஆம் திகதி நிறைவேறிய 5367 இலக்க உறுதியின் மூலம் ஐயாக்குட்டி மயில்வாகனம் பெண் கற்பகம் என்பவருக்கு விற்றுள்ளார். அவர்கள் அதே நொத்தாரிசு முகதாவில் 1971.04.12 ஆம் திகதி நிறைவேறிய 6405 இலக்க உறுதியின் மூலம் தம்பிராசா ஞானசம்பந்தன் என்பவருக்கு அறுதியளித்துள்ளார். அவர் ஆதனத்தை நொத்தாரிசு வேலுப்பிள்ளை விநாசித்தம்பி முகதாவில் 1973.04.16 ஆம் திகதிய நிறைவேறிய 13346 இலக்க உறுதியின் மூலம் வைரமுத்து தம்பிராசா பெண் மனோன்மணிக்கு விற்றுள்ளார். பின்னர் தம்பிராசா கைம்பெண் மனோன்மணி பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் தம்பிப்பிள்ளை முகதாவில் 1977.10.16 ஆம் திகதி நிறைவேறிய 2514 இலக்க உறுதி மூலம் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பெண் சரஸ்வதிக்கு விற்பனை செய்துள்ளனர். அவர்களின் பின்னர் ஆதனத்தை அவர்களின் வாரிசான சுப்பிரமணியம் கணேசானந்தம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் முகதாவில் 2004.05.26 ஆம் திகதி நிறைவேறிய 3043 இலக்க வெளிப்படுத்தல் மூலம் தனது பெற்றோருக்குப்பின் தனக்கே ஆதனம் சொந்தமென வெளிப்படுத்தி உறுதி முடித்துக்கொண்டார். பின்னர் அதே நொத்தாரிசு முகதாவில் மூலம் 2022.01.10 ஆம் திகதி 12660 இலக்க பிரகடன உறுதி மூலம் தனது காலஞ்சென்ற தனது பெற்றோருக்கு நானும் கோபால சூரியர் ரதிதேவி என்ற பெண் பிள்ளையும் உள்ளனர் என்றும் அவருக்கு ஏற்கனவே பெற்றோரால் வேறு காணிகள் சீதனமாக கொடுக்கப்பட்டுள்ளதெனவும் அதனால் இவ்வாதனத்தில் அவருக்கு எவ்வித உரித்தும் அக்கறையும் இல்லை எனவும் வெளிப்படுத்தி உறுதி முடித்துக்கொடுத்துள்ளார்.

**ஆதனவிபரம்**


வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்றும் அளவெட்டி இறையுமான "குசலன்தோட்டம்" என்ற நிலப்பரப்பு 01 குழி 15.10, இது நிலஅளவையாளர் ந.சரவணமுத்து அவர்களால் வரைந்த 809/03.12.2013 இலக்க வரைபடத்தில் துண்டு 01, என காட்டப்பட்டுள்ளது.

இதன் எல்லைகள்.
கிழக்கு - கோபாலசூரியகுமார் பெண் ரதிதேவியின் ஆதனம்
வடக்கு - ஒழுங்கை
மேற்கு- ஒழுங்கை
தெற்கு - சாரங்கபாணி உருத்திரபசுபதிக்கும் பெண் சுசீலாதேவிக்குரிய ஆதனம்

இவ்வாதனத்தை சுப்பிரமணியம் கணேசானந்தம் என்ற பெயரில் மாற்றம் செய்வது தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ உரிய ஆவணங்களை சமர்ப்பித்தும் வெளிநாட்டில் இருப்பவர்கள் உறவினர்கள் மூலமாக ஆவணங்களை சமர்ப்பித்தும் தெரியப்படுத்தலாம். ஆட்சேபனை ஏதும் வராதவிடத்து ஆதனத்தை உரிமைமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## மரண அறிவித்தல்



### செல்வரத்தினம் சுயந்தன் (குட்டி)

**(உரிமையாளர்-கரன் ஸ்ரோர்ஸ், கொட்டாஞ்சேனை)**

வேலணை கிழக்கு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சுயந்தன் (குட்டி) நேற்று (21.10.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் முத்துலெட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும், நிரோஜாவின் அன்புக் கணவரும், சிவலிங்கம் வீரலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சுதாந்தினி, காலஞ்சென்ற சுதாகரன், சுதாகுமார், சுதர்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிரோஜன், சிவறோஜன், சிவரூபன், சிவறீகன் ஆகியோரின் மைத்துனரும், தனுக்சன், தனுஸ்காவின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது வேலணையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி.இ:077 9044 645 (சிவரூபன்)
077 4406 052 (சிவறீகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21329) 1/6

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
19.10.1938

மறைவு
24.09.2022

கடந்த 24.09.2022 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி வைத்திலிங்கம் ரூபசௌந்தரி அம்மாள்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (21.10.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள **"ராம் மஹால்"** இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

"ராம் மஹால்"
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

R.V.G
குடும்பத்தினர்

(cs 42747) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முழுமையான சீரமைப்பின்றி காரைநகர் – மானிப்பாய் வீதி

- இரவுநேரங்களில் உயிராபத்து
- பெரும் இன்னலில் மக்கள் பயணம்



**யாழ்ப்பாணம், ஒக். 22**

**வடக்கில் அதிகளவான மக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியாகக் காணப்படும் காரைநகர்- மானிப்பாய் வீதி சுமார் 3 தசாப்த காலமாக முழுமையான புனரமைப்பின்றிக் காணப்படுகிறது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இவ் வீதியில் ஆறுகால்மடம் முதல் காக்கைதீவு செல்லும் சந்தி வரையான வீதி காப்பெற் இட்டு செப்பனிடப்பட்டுள்ளது. குறித்த சந்தி முதல் மானிப்பாய் பொலிஸ் நிலையம் வரையான வீதி பெரும் குண்டும் குழியும் நிறைந்து புனரமைப்பின்றி காணப்படுகிறது.

அதேபோல மானிப்பாய் பொலிஸ் நிலைய சந்தி முதல் சங்கானை மல்லாகம் சந்தி வரை காப்பெற் இடப்பட்டுள்ளது. சங்கானை மதகு பகுதி முதல் பொன்னாலை வரையான பகுதி முன்பு இருந்த வீதியை விட குண்டும் குழியுமாக மாறியுள்ளது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நிலைமை காரணமாக குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதியால் அன்றாட வேலைகளுக்குச் செல்வோர், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் எனப் பலரும் பெரும் இன்னல்களை எதிர் நோக்குகின்றனர்.

அரைகுறை திருத்தப்பணிகளுடன் காணப்படும் மதகுகளில் தற்போது பெய்துவரும் மழை நீர் நிரம்பி வீதியை இனங்காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இரவுவேளைகளில் பயணிப்போர் வீதிவிபத்துக்களில் சிக்குவதோடு உயிராபத்துக்கள் ஏற்படும் சூழலும் உருவாகும். வீதி புனரமைப்புக்கு முன்பு குறித்த வீதியால் ஓரளவேனும் பயணிக்கக்கூடிய நிலை காணப்பட்டது. ஆனால், தற்போது கைவிடப்பட்ட அரைகுறை புனரமைப்புக் காரணமாக வீதி முன்பை விட மோசமாகியுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு, வலி. மேற்கு, காரைநகர் என மூன்று பிரதேசசபைகள், சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் பிரதானமான வீதியாக இந்த வீதி காணப்படுகின்றது. இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பலமுறை சுட்டிகாட்டப்பட்டபோதிலும் மழைகாலம் ஆரம்பமாகும்வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சட்டவிரோத கட்டுமானங்களுக்கு பணத்தை வாரியிறைக்கும் அரசாங்கம் பொதுமக்களின் அத்தியாவசிய ஒரு தேவையாகக் காணப்படுகின்ற வீதிப்புனரமைப்புக்கு நிதியில்லை எனத் தெரிவிப்பது கேலிக்குரியதாகும். அபிவிருத்தி என்பது மக்களுக்கானதே அன்றி அதிகாரிகளுக்கோ அரசியல்வாதிகளுக்கோ உரியதல்ல.

எனவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் அரசுக்கும் அழுத்தம் பிரயோகித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-125)

# இளவாலை பொலிஸ் நிலைய கழிவுநீர் தனியார் காணிக்குள்

*வலி. தென்மேற்கு சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஒக். 22

வலிகாமம் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட இளவாலைப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தின் கழிவுநீர் சட்டவிரோதமான முறையில் தனியார் காணிக்குள்ளும் பிரதேசசபையால் நிறைவுறுத்தப்படாத நீர்வடிகாலுக்குக்குள்ளும் விடப்படுகிறது என வலி. தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக்கோ தெரிவித்துள்ளார்.

வலி. தென்மேற்குப் பிரதேசசபையின் அமர்வு நேற்று நடைபெற்றபோதே அவர் அதனைச் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒவ்வொரு பிரதேசசபையும் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுக்கின்றனர்.

ஒரு பொதுமகன் நீரைத் தேக்கி வைத்திருந்தால் உடனடியாக தண்டம் அறவிட்டு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பானவர்கள், தனியார் காணியில் சட்டவிரோதமாக கழிவு நீரை வெளியேற்றும் இளவாலை பொலிஸ் நிலையத்தினருக்கு அனுமதியளிக்கின்றனர்.

கட்டடம் ஒன்று அமைக்க முற்படும்பொழுது கழிவுநீர் தொட்டி உள்ளதா? என பரிசோதனை செய்யும் பிரதேச சபை ஒரு பொலிஸ் நிலையத்தின் மீது நடவடிக்கை எடுக்க முற்படாதுள்ளது.

காக்கிச் சட்டை என்றால் சட்டத்தை மீறலாமா? இதனை ஏற்றுகொள்ளமுடியாது. இதற்கு தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-125)

# வர்த்தக நிலையங்கள் யாழில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்.நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று சுகாதாரப் பிரிவினரால் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

மனித பாவனைக்கு கேடுவிளைவிக்கும் காலாவதியான பொருள்களை வைத்து விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன்போது எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நடைபாதைகளில் விற்பனைக்காக பொருள்களும் அகற்றப்பட்டன என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கே.உதயபாலா தெரிவித்தார். (ச-17)

# உக்ரைனைச் சுற்றிவளைத்தது ரஷ்யா; பெலாரஸில் படைக்குவிப்பு மும்முரம்

மொஸ்கோ, ஒக். 22

உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சியாக ரஷ்ய இராணுவம் பெலாரஸ் வழியாக உக்ரைனைச் சுற்றிவளைத்துள்ளது.

ரஷ்யப் படைகளின் பெரும் அணியொன்று பத்துக்கும் குறையாத சிறப்பு ரயில்கள் மூலம் பெலாரஸை அடைந்து உக்ரைனைச் சுற்றிவளைத்துள்ளன. இது உக்ரைனை முற்றாக ஆக்கிரமிக்கும் புடினின் வியூகமாக இருக்கலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.




நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முன்னெடுப்புக்களை ரஷ்யா கடுமையாக எதிர்த்தது. எனினும் இந்த எதிர்ப்பைக் கண்டுகொள்ளாத உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி நேட்டோவுடன் ஒப்பந்தம் செய்ய முன்வந்தார்.

இதையடுத்தே உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கையை அறிவித்தது.

கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் இன்றுவரை நடைபெற்றுவரும் இந்தப் போரில் ரஷ்யா உக்ரைனின் சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ளது.

குறிப்பாக உக்ரைனின் நான்கு எல்லைப் பெருநகர்கள் ரஷ்யாவுடன் சர்வதேச எதிர்ப்பை மீறி புடினால் இணைக்கப்பட்டுள்ளன.

எனினும், முன்னைப்போன்று ரஷ்யாவால் உக்ரைனை ஆக்கிரமிக்க முடியவில்லை. அமெரிக்க மற்றும் மேற்கத்தேய நாடுகளின் இராணுவ உதவியுடன் உக்ரைன் ரஷ்யப் படைகளுக்கு ஈடுகொடுத்துப் போரிடுகின்றது.

இந்த நிலையிலேயே பெலாரஸ் வழியாக உக்ரைனை சுற்றிவளைத்திருக்கின்றன ரஷ்யப் படைகள்.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடாகிய பெலாரஸ், ஒருபுறம் அதன் நெருங்கிய கூட்டாளியான ரஷ்யாவுடன் எல்லையைக் கொண்டுள்ளது. மறுபுறம் உக்ரைன், போலந்து, லத்வியா, லித்துவேனியா போன்ற நேட்டோ சார்பு நாடுகளுடன் எல்லைகளைப் பகிர்ந்துள்ளது. உக்ரைன் மீதான படையெடுப்புத் தொடங்கியது முதல் இந்த எல்லைப் பகுதிகளில் பதற்ற நிலை காணப்படுகிறது.

உக்ரைன் போரில் ரஷ்யாவை ஆதரித்துவருகின்ற பெலாரஸ் நாடு மொஸ்கோவுடன் மேலும் ஓர் அடி நெருங்கிச் செயற்பட விரும்புகிறது என்று அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ கடந்த திங்களன்று தெரிவித்திருந்தார்.

போலந்து, லித்துவேனியா, உக்ரைன் போன்ற நாடுகளால் பயிற்சியளிக்கப்பட்ட கிளர்ச்சியாளர்களால் பெலாரஸ் நேரடியான அச்சுறுத்தல்களைச் சந்தித்துள்ளது என்றும் அதேசமயம் உக்ரைன் பெலாரஸின் தெற்கு எல்லைக்குள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது எனவும் கூறி அவர் நாட்டுக்குள் ரஷ்யப் படைகள் வரவழைக்கப்படுவதை நியாயப்படுத்தியிருந்தார். இதன் தொடச்சியாகவே பெலாரஸில் தற்போது ரஷ்யப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றை அரசியலுடன் இணைத்துப் பார்க்கக்கூடாது

## பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.22**

**வரலாற்றை அரசியலாகப் பார்க்கக்கூடாது. அதை வரலாறாகப் பார்க்கவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக முன்னாள் வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்தார்.**

யாழ். பல்கலைக்கழக வேந்தர் தகைசார் வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.பத்மநாதனின் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் பற்றிய மூன்று ஆய்வு நூல்களின் வெளியீடு கடந்த புதனன்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அண்மையில் இளம் ஆசிரியர் ஒருவர் இலங்கையில் பல்லினப் பண்பாடு பற்றிய ஆய்வு செய்திருந்தார். அந்த ஆய்வைப் பார்த்தபோது கிட்டத்தட்ட ஐரோப்பியர் காலம்வரை இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிடையே ஐக்கியமான சூழ்நிலை இருந்தது.
அரசியல் ஆதிக்கத்துக்காக போரிட்ட தமிழர் படையில் சிங்களப்படை வீரர்கள் இருந்தார்கள். சிங்கள மன்னர்களின் படையெடுப்பில் தமிழ் மன்னர்கள் இருந்தார்கள், திருமணங்கள் இருந்தன. தென்னிலங்கையில் பல பௌத்த ஆலயங்களில் இந்துத் தெய்வங்கள் வழிபடப்பட்டன. பௌத்த கல்லூரிகளில் தமிழ் படிப்பித்தார்கள்.
நாங்கள் இந்த அரசியலில் இருந்து விலகி எங்களுடைய இனம், மதம், பண்பாடுகள் பற்றிப் பேசுகின்றபோது சமகாலத்தில் விரும்பியோ விரும்பாமலோ அரசியலுக்குள் எங்களையும் இணைத்துக் கொள்வார்கள். அப்படியான வெளியீடுகள் வரும்போது இவர்களை தமிழ்த் தேசிய தீவிரவாதிகள் என்பார்கள். சில சந்தர்ப்பங்களில் ஆதாரங்கள் கிடைக்காத நிலையில் ஊகங்கள் வெளிவரலாம். அவை பிற்காலத்தில் நிராகரிக்கப்படலாம் அதில் தவறில்லை.
உண்மையான வரலாற்று ஆதாரங்களை வைத்து உண்மையைச் சொல்லுகின்ற நிலையில் ஓர் இனத்தை மதத்தை முன்னிலைப்படுத்தி பொய்யான தரவுகளை மக்களிடம் கூறி வழிநடத்துவது ஒரு வரலாற்று ஆசிரியருடைய பணியல்ல.
இத்தகைய எல்லாவற்றையும் சரியாக புரிந்துகொண்டு நடுநிலையோடு நிதானமாக வரலாற்றைப் படைக்கக்கூடியவர் யாழ்.பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் பத்மநாதன்- என்றார். (எ-27)



தேசிய புத்தாக்கப் போட்டியில்

# வேம்படி மகளிர் மாணவிக்கு தங்கம்

**கொழும்பு, ஒக். 22**

வளர்முக நாடுகளின் பெண்களுக்கான விஞ்ஞான அமைப்பின் இலங்கைக் கிளையும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பிறப்புரிமையியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல்துறையும் இணைந்து நடத்திய தேசிய புத்தாக்கப் போட்டியில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் மாணவி மதுரா அருந்தவம் தங்கம் வென்றார்.
பதக்கம் வழங்கும் நிகழ்வு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூதவை மாநாட்டு மண்டபத்தில் கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் சிறந்த பெண் புத்தாக்குநருக்கான பதக்கத்தை வேம்படி மகளிர் மாணவிக்கு, ஸ்ரீ ஜெயவர்த்தனப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சித்தானந்த லியனஹே அணிவித்தார்.
சான்றிதழை வளர்முக நாடுகளுக்கான பெண்களுக்கான விஞ்ஞான அமைப்பின் தலைவி பேராசிரியர் சுகந்திக்கா சுரேஷ் வழங்கினார். (ஒ-14,27)

### மூத்த...

காலை தனது வீட்டில் அவர் உயிரிழந்தார்.
60 களில் எழுதத் தொடங்கி பல்லாண்டு காலமாக ஈழத்து எழுத்துத்துறையில் பிரகாசித்த அவர், சாகித்ய ரத்னா, விஷ்ணுபுரம் இலக்கிய விருது எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். ஈழத்து இலக்கியத்துக்கு, குறிப்பாக மலையக இலக்கியத்துக்குச் செழுமை மிகுந்த பல படைப்புகளைத் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)


### ஹெரோய்னுக்கு...

இருவேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னுக்கு அடிமையான நான்கு பேர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கனகராயன்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் இருவரைத் தாக்கிவிட்டு 3 பவுண் நகைகளையும், 40 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் பதுங்கியுள்ளனர் என்று கிடைத்த தகவலுக்கு அமைய மானிப்பாய் பொலிஸார் நால்வரைக் கைது செய்தனர்.
அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் நவாலி,வழுக்கையாற்றுப் பகுதியில் தம்பதியரைத் தாக்கி மூன்று பவுண் நகையைக் கொள்ளையிட்டமையும் இதே குழுவைச் சார்ந்த மூவர்தான் என்று தெரிய வந்துள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தி மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-125)

### மாணவனிடம்...

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் போதைப் பாக்கை உடைமையில் வைத்திருந்த மாணவனொருவன், ஆசிரியரின் விசாரணைகளை அடுத்து தனது கையை 'பிளேட்டால் அறுத்துக் காயப்படுத்தியுள்ளான். இதையடுத்து மாணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.
குறித்த மாணவன் போதைப்பாக்கை உடமையில் வைத்திருந்ததை அடுத்து குறித்த ஆசிரியர் அது தொடர்பில் அதிபருக்கும், அதிபரூடாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் தெரியப்படுத்தியுள்ளார். இதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பாடசாலைக்கு வந்ததை அடுத்தே மாணவன் தனது கையைக் காயப்படுத்தியுள்ளான் என்று தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த மாணவனுக்கு எவ்வாறு போதைப்பாக்கு வந்தது? பாடசாலையில் விநியோகம் செய்கின்றானா? என பாடசாலை நிர்வாகம் உரிய தரப்பினரூடாக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறியமுடிகிறது. (அ-ம-125)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை பத்மாவதி (பத்தினிப்பிள்ளை)

கரவெட்டி மத்தொனியை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பத்மாவதி அவர்கள் (21.102022) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் ஐயா வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஞானேஸ்வரி, செல்வச்சந்திரன் (சுவிஸ்) யோகேஸ்வரி (சுவிஸ்), சுபேந்திரன் (சுவிஸ்), சோதிமலர் (சிங்கப்பூர்), பிரபாகரன் (யா/சிதம்பராக்கல்லூரி ஆசிரியர்), பிரபா( மாவட்ட நீதிமன்றம் மல்லாகம் ) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவகுமார், தசாயினி, செந்தில்நாதன்,குணசிங்கம் (சுவிஸ்), செந்தில்நாதன் (சிங்கப்பூர்) சிவச்செல்வி (யா/கைதடி சேதுகாவலர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாரகன் (சிங்கப்பூர்), அனுதர்சன், கபிலாசன், அஜந்தன், மருசன்,சர்மிலன்,மீரா,சகானா (சுவிஸ்),ஆரனி,திருமலர் (சிங்கப்பூர்),அஸ்விகா,டீபிகா ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2022) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நெல்லியடி துரையன் தோட்டத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பாவனைக்கு எதிராக வலி. தென்மேற்கில் தீர்மானம்

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு வலி. தென்மேற்கு பிரதான மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் போதைப்பொருள் பாவனையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக நின்று அதற்கேற்ப தீர்மானங்களையும் நிறைவேற்றினர்.

வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் போதைப்பொருள் பாவனை நாள்தோறும் அதிகரித்து வருகின்றது. இதனால் சமூக விரோதச் செயல்கள் பல்கிப் பெருகியுள்ளதுடன், மருத்துவச் செலவுகளும் எகிறிச் செல்கின்றன. இந்த நிலை தொடர்ந்தால் கலாசாரப் பிறழ்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எமது சமூகம் எதிர்கொள்ளும். ஆதலால், எமது பிரதேசத்துக்கு உட்பட்ட மானிப்பாய் மற்றும் இளவாலைப் பொலிஸார் கூட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி இந்தப் போதைப்பொருள் பாவனைக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்று சபை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து பிரேரணையை முன்வைத்து நிறைவேற்றினர். அவற்றை தமது ஆளுகைக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களில் நேரில் முன்னிலையாகி அவர்கள் கையளித்தனர். (அ-ம-125)


## பெயர் மாற்றம்

வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தைச் சேர்ந்த
**திரு. திருமதி வினோதினி நிமல்ராஜ்**
ஆகிய நாம் எமது இரண்டாவது பிள்ளை
**நி.அய்வின்** என்பவரது பெயரை
இன்றுமுதல் **நி.ஹர்னித்** என மாற்றம்
செய்கின்றோம் என்பதை இத்தால் சகலருக்கும்
அறியத்தருகின்றோம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி சி.வினோஜிதா** அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் திரு.செல்லையா திருஞானசுந்தரம்**

அவர்கள் 21.10.2022 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம்**
**தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை**
**பளை - கிளிநொச்சி.**



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 17 . 10 . 1936

விண்ணில் 22 . 09 . 2022



**அமரர் திருமதி சாரதாதேவி மகாதேவன்**

அமைதியின் உருவமாய்
அடக்கத்தின் இருப்பிடமாய்
பண்பின் பெருந்தகையாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம் மத்தியில் அன்பு ஒளியாய் இருந்தீர் அம்மா
உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் இருந்து
என்றென்றும் மறையாது அம்மா!

எங்கள் குடும்பத்தலைவியின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் எங்களுக்கு ஆறுதல் கூறியதோடு பல்வேறு வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

"லக்ஷ்மி"
வதிரி, கரவெட்டி.
தொடர்பு: 076 853 1257

நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**
ம.மதீஸ்வரன் (மகன்)


### 'ஹைஏஸ்'...

முற்றுமுழுதாக எரிந்து நாசமானது. இந்த அசம்பாவிதம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-26-125-20-27)

### '13' இருக்கும்...

எதிர்த்து வாக்களித்த ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினராக அவர் பதிவானார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருக்கும்வரை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படக்கூடாது என்பதாலேயே தான் எதிர்த்து வாக்களித்தேன் என்ற காரணத்தை வீரசேகர தெரிவித்தார். (அ-ம-44)

### சிவரூபனின்...

பளை அரச மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் சிவரூபன், கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியமையையடுத்து, அவரின் பாதுகாப்புத் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்துமாறு கிளிநொச்சி நீதிமன்றம் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளது.

சுமார் 300 வரையிலான கொலை, வன்புணர்வு, காணாமல் ஆக்குதல் உள்ளிட்ட வழக்குகளது முக்கியமான சாட்சியாக மருத்துவர் சிவரூபன் உள்ளார். இந்த நிலையில் நீதிமன்றங்களுக்கு வழக்கு விசாரணைகளுக்கான சாட்சியாக தொடர்ச்சியாக மருத்துவர் சிவரூபன் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நியூமகஸின் சிறைச்சாலையில் இருந்து அழைத்து வரப்படுகின்றார். எனினும் அவர் அழைத்து வரப்படுகின்ற சிறைச்சாலை வாகனங்களிலேயே அவர் சாட்சியமளிக்கின்ற கொலை, பாலியல் வன்புணர்வு உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களும் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்த நிலையிலேயே தனது உயிருக்கான பாதுகாப்பு தொடர்பில் நீதிமன்றின் கவனத்துக்கு மருத்துவர் சிவரூபன் கொண்டு சென்றுள்ளார். இதனையடுத்து சிவரூபனின் பாதுகாப்பு தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்த கிளிநொச்சி நீதிமன்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளது.

பளை அரச மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகரான சின்னையா சிவரூபன் 2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி இலங்கை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதாகியிருந்தார். விடுதலைப்புலிகளது மீள் உருவாக்கம் மற்றும் வெடிபொருள்களை பதுக்கி வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதான மருத்துவர் சின்னையா சிவரூபனுடன் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் ஏழு பேரும் கைதாகியிருந்தனர். எனினும் இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள் மீது குற்றச்சாட்டுக்கள் ஏதும் சுமத்தப்படாத நிலையில் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் மருத்துவர் சிவரூபனின் விடுதலை சட்டமா அதிபர் திணைக்களத்தால் திட்டமிட்டு இழுத்தடிக்கப்படுவதாக குடும்பத்தவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-ம)

### ஹெரோய்னுடன்...

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையிலேயே குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 30 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

### அலைபேசி...

யாழ்ப்பாணத்தில் பேருந்துகளில் பயணிக்கும் இளம் பெண்களிடம் அலைபேசிகளை அபகரிக்கும் கும்பலைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 9 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர். சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அச்சுவேலி, நீர்வேலி, சுன்னாகம், பலாலி உள்ளிட்ட இடங்களில் பேருந்துகளில் பயணிக்கும் இளம் பெண்களிடம் அலைபேசிகளை சந்தேக நபர் அபகரித்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்டக்குற்றத்தடுப்புப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். அலைபேசிகளைத் தவறவிட்டு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை வழங்கியவர்கள், தத்தம் அலைபேசிகளை அடையாளம் காட்டுமாறு மாவட்ட குற்றத்தடுப்புபொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)


**விதைநெல், தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்கு**

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு விளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட குறைந்த கால BG 34.6 இன விதைநெல்லும், நல்லின தென்னம் நாற்றுக்களும் விற்பனைக்குண்டு.

**077 659 2044**



## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 05 . 1934

மறைவு 20 . 10 . 2022



**இராசையா சந்திரசேகரம்**

குமரகோட்டம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சந்திரசேகரம் அவர்கள் கடந்த (20.10.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் மகனும், கந்தையா - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சந்திரமோகன் (கனடா), கௌசலா (வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களம்), மேகலா, சசிகலா (ஆசிரியர், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மைதிலி (கனடா), லோகாநந்தன், சிவநாதன் (புத்தளம்), பாலமுகுந்தன் (ஆசிரியர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், ஷாம்பவி, ஆதுஷி (கனடா), ஆதிரா (கனடா), ஆதித்தன் (கனடா) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து, இரத்தினேஸ்வரி மற்றும் நடராஜா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, மகேஸ்வரி மற்றும் மகாலட்சுமி, காலஞ்சென்றவர்களான சிவபாதம், சிவலிங்கம் மற்றும் சரோஜினிதேவி, சற்குணதேவி, நவமலர்தேவி ஆகியோரின் மைத்துனரும், சரோசா, பரமேஸ்வரி, விக்கினேஸ்வரன், பத்மினி, நகுலேஸ்வரன், மகாலட்சுமி, காலஞ்சென்ற விமலேஸ்வரன் மற்றும் தர்மசோதி ஆகியோரின் சிறிய தந்தையும், சாயிகுமார் (கனடா), திருமதி கோமதி சிவக்குமார் (வைத்திய கலாநிதி), திருமதி கௌரி பிரணவச் செல்வன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், முகுந்தன் (லண்டன்), சுகுந்தன் (வைத்திய கலாநிதி), காலஞ்சென்ற முகுந்தினி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

071 1312 8727 / +14168790037 /
074 0130 447 / 076 86 01077

(CS 21328) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேறியது...

மக்கள் கோரிய உண்மையான மாற்றத்தை நோக்கி பயணிப்பதற்கான முதற்படியாகவே '22'ஆவது திருத்தச்சட்டத்தைக் கருதவேண்டும் எனவும், மக்கள் போராட்டத்தாலேயே இது சாத்தியப்பட்டது எனவும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டின.

ராஜபக்சக்களின் ஆட்சிக்கு எதிராக கொழும்பு, காலி முகத்திடலில் ஏப்ரல் 9ஆம் திகதி மக்கள் போராட்டம் ஆரம்பமானது. ஜனாதிபதி பதவியை வகித்த கோத்தாபய ராஜபக்சவும், பிரதமராக செயற்பட்ட மஹிந்த ராஜபக்சவும் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி போராட்டக் கிராமங்களும் உதயமாகின. இதையடுத்து மஹிந்த, கோத்தாபய ஆகியோர் பதவிவிலக, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து 22ஆவது திருத்தத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மே 20ஆம் திகதியளவில் ஆரம்பித்தனர். இதற்கான பொறுப்பு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது. எனினும், இரட்டைக் குடியுரிமை விவகாரம், நிறைவேற்றதிகார முறைமை நீக்கம் உள்ளிட்ட சரத்துக்களால், 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற பெரமுன தயங்கியது.

எனினும் ஜனாதிபதி ரணில் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன இருவரும் நடத்திய பல சுற்றுப் பேச்சின் விளைவாக 22 ஆவது திருத்தச்சட்டத்தை நேற்றும் நேற்றுமுன்தினமும் விவாதத்துக்கு எடுத்து நிறைவேற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்தே 178 மேலதிக வாக்குகளால் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி உட்பட நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் ஆதரவாக வாக்களித்தன. பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர மட்டுமே எதிராக வாக்களித்தார்.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது ஆதரவாக 179 வாக்குகள் அளிக்கப்பட்டன. குழுநிலை விவாதத்தின்போது (மூன்றாம் வாசிப்பு) சட்டவரைவுக்கு ஆதரவாக 174 வாக்குகள் அளிக்கப்பட்டன. அதன்பின்னர் சட்டவரைவு திருத்தங்கள் சகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளது என சபாநாயகர் அறிவித்தார். 22 ஆவது திருத்தச்சட்டம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அரசமைப்புக்குள் 21ஆம் திருத்தமாகவே இது உள்வாங்கப்படும். சபாநாயகர் சட்டவரைவைச் சான்றுரைப்படுத்திய நாளில் இருந்து சட்டம் நடைமுறைக்கு வரும். (அ-ம-44)

## 22க்கு...

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மாலை வாக்கெடுப்பு இடம்பெற்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 உறுப்பினர்களில் 6 பேரே பங்கேற்றனர்.

வாக்கெடுப்பில் கலந்துகொண்ட சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், தவராசா கலையரசன் ஆகியோர் திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இரா.சாணக்கியன் எம்.பி. வெளிநாடு சென்ற காரணத்தால் நேற்று சபைக்கு வரவில்லை. அதேவேளை, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், எஸ்.வினோநோகராதலிங்கமும் சுகவீனம் காரணமாக நேற்று சபைக்கு சமுகமளிக்கவில்லை. (அ-ம-22)

## 22 நிறைவேற்றப்பட்டமை...

தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலின்போது 69 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணையையும், பொதுத் தேர்தலின்போது 68 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணையையும் கருத்தில்கொள்ளாது தன்னிச்சையான அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டு கடுமையான முடிவுகளை எடுத்ததன் மூலம் ஒரு மக்கள் போராட்டம் ஏற்பட்டது. இதன் விளைவாக, ஏழு மூளை இருப்பதாகச் சொன்ன நிதி அமைச்சரும், பெரும்மன்னர் எனச் சொன்ன பிரதமரும், எதேச்சாதிகார ஜனாதிபதியும் அவர்களது அடிமைக் கூட்டமும் ஓடிச் சென்றனர். அதன் காரணமாகவே 22ஆவது அரசமைப்புத் திருத்தம் பேசுபொருளாகி முன்வந்தது.

இதன் பிரகாரம், 22ஆவது திருத்தச் சட்டத்தின் பூரண உரிமைகளும் மரியாதைகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த பிரஜைகளுக்குமே வழங்கப்படவேண்டும். நாடாளுமன்றத்தில் 225 பேருக்கு வரப்பிரசாதங்கள், சலுகைகள் வழங்கப்படுவது போலவே 225 இலட்சம் மக்களுக்கும் வரப்பிரசாதங்கள், சலுகைகள் வழங்கப்படவேண்டும்.

22 ஆவது திருத்தம் என்பது முழுமையான அரசமைப்புத்திருத்தம் இல்லையென்றாலும், அதன் முக்கியமான காரணிகள் மீதான நம்பிக்கையினாலும், நாடு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு, சர்வதேச சமூகத்துக்கு இது சாதகமானதொரு நேர்மையான சமிக்ஞையைக் கொடுக்கும் என்ற உணர்வினாலும், மக்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டும் நான் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியினர் இதற்கு ஆதரவளிக்கின்றோம்' - என்றார். (அ-ம-22)

## 22 மீதான...

பங்கேற்கவில்லை. ஆளுங்கட்சியின் பிரதான பங்காளியான பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ச, பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஆகியோரும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பதற்கு 19 ஆவது திருத்தச் சட்டத்தில் தடைவிதிக்கப்பட்டது. எனினும், கடும் எதிர்ப்புக்கு மத்தியில் '20'ஆவது திருத்தச்சட்டம் ஊடாக அந்தத் தடை நீக்கப்பட்டது. இதனையடுத்தே தேசியப் பட்டியல் ஊடாக பஸில் ராஜபக்ச சபைக்கு வந்தார்.

இந்த நிலையில் இரட்டைக் குடியுரிமைத் தடை 22 ஆவது திருத்தத்தில் மீண்டும் உள்வாங்கப்பட்டது. அந்த சரத்தை நீக்குவதற்கு பெரமுன தரப்பில் கடும் அழுத்தங்கள் வழங்கப்பட்டன. எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை. இதனால், பஸிலின் நெருங்கிய சகாக்களான பிரசன்ன ரணதுங்க ரோஹித அபேகுணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சாகர காரியவசம், சஞ்சீவ எதிரிமான்ன, பவித்ரா தேவி வன்னியாராச்சி, காமினி லொக்குகே உள்ளிட்டவர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. (அ-ம-44)

## இந்திய...

22ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் நுழைந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில், மருத்துவர்கள், தாதியர் உள்ளிட்ட 21 பேர் கொல்லப்பட்டனர். அந்தக் கொடூரத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 35ஆவது அஞ்சலி நிகழ்வுகள் போதனா மருத்துவமனையின் ஊழியர்களின் ஏற்பாட்டில் நேற்று மு.ப. 10 மணியளவில் இடம்பெற்றது.

உயிரிழந்தோரின் உறவுகளால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, படுகொலை செய்யப்பட்டோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், மருத்துவமனை ஊழியர்கள், உயிர்நீத்தவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-20-26)

## 9 அரசியல்....

நீண்டகாலமாகச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒன்பது தமிழ் அரசியல் கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 8 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையிலும், ஒருவர் கொழும்பு நீதிமன்றத்தாலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுவித்துள்ள 8 அரசியல் கைதிகளும் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர். அவர்களில் நான்கு பேர் நேற்றையதினம் முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டனர். ஏனைய நான்கு பேரும் விடுவிக்கப்படுவதில் சிறுசிறு சட்டச்சிக்கல்கள் நிலவுகின்றன.

இந்த நால்வரில் இருவர் தமது சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர். ஆதலால், தற்போது அவர்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் முற்றுப்பெறாத நிலையில் உள்ளதாகவே கருதப்படுகின்றது. ஆதலால், நீதிமன்றில் அவர்கள் இருவரும் தமது சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீட்டை திரும்பப்பெற்றதும் நீதிமன்ற நடவடிக்கைகள் முற்றுப் பெற்றதாகக் கருதப்பட்டு அவர்கள் இருவரும் விடுவிக்கப்படுவார்கள்.

ஏனைய இரண்டு பேருக்கும் நீதிமன்றம் 6 மாதம் மறுவாழ்வு வழங்கித் தீர்ப்பிட்டுள்ளது. ஆதலால், அவர்கள் மறுவாழ்வுக்குச் செல்லாமல் விடுவிக்கப்படுவதாயின் ஜனாதிபதி செயலகத்திலிருந்து அறிவுறுத்தலொன்று வரவேண்டியுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

கொழும்பில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதி, அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படாததை அடுத்தே நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம)

## திருத்தங்கள்...

களை உள்ளடக்கிய, புதிய அரசமைப்பு உடனடியாக உருவாக்கப்பட வேண்டும். அதைவிடுத்துப் பழைய அரசமைப்பில் தொடர்ந்து திருத்தங்களை மேற்கொள்வது நாட்டு மக்களை ஏமாற்றும் செயலாகும்-இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அரசமைப்பின் 22ஆம் திருத்தம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'நாடாளுமன்றத்தில் இதுவரை திருத்தம் செய்யப்பட்ட அனைத்து திருத்தங்களுக்கும் எந்தவித வேறுபாடுமின்றி ஆதரவாக வாக்களித்தவர்கள் இன்றும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

அதேவேளை, ஒரு திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்து, அதே திருத்தத்துக்கு எதிராகவும் வாக்களிக்கும் வேடிக்கையான மனிதர்களும் இந்த நாடாளுமன்றத்தில் உள்ளனர். 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்களில் பெரும்பாலான மூத்த அரசியல்வாதிகள் தற்போது 22 ஆவது திருத்தமே இறுதித் தீர்வு எனப் புகழ் பாடுகின்றார்கள்.

ஜனநாயகத்தைப் பாதுகாத்து தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பொருத்தமான அம்சங்களை உள்ளடக்கிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்' - என்றார். (அ-ம-22)


## மரண அறிவித்தல்

மலர்வு 07 . 05 . 1951



உதிர்வு 20 . 10 . 2022

திருமதி

**சுசீலாதேவி தில்லைவனராசா**

(ஓய்வுநிலை ஆசிரியை -
யா / மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)

கேணியடி, மீசாலை மேற்கினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசீலாதேவி தில்லைவனராசா நேற்றுமுன்தினம் (20.10.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சற்குணம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் மற்றும் தில்லைவனராசா (ஓய்வுபெற்ற சிரேஷ்ட சாலைப் பரிசோதகர், இ.போ.சபை - பருத்தித்துறை) அவர்களின் பாசமிகு மனைவியும், தேவிகாராணி, நிர்மலாதேவி, ஜெயசீலன், குணசீலன், காலஞ்சென்ற சிறீரஞ்சன், ஜெயசீலி, ஜெயரஞ்சன், நவசிறீ ஆகியோரின் அருமைச் சகோதரியும், இன்பராஜ் (லண்டன்), கோஷலா (சிங்கப்பூர்), செந்தூரன் (லண்டன்), பிரியா (ஆசிரியை - யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருள்வேள் (சிங்கப்பூர்), சியாமினி (லண்டன்), ஜங்கரன் (ஆசிரியர் - யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருவேள், வேளினி, மகிழினி, ஆத்விகா, ஆதன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (20.10.2022) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
077 559 7541

கேணியடி,
மீசாலை மேற்கு, மீசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

- பான்ஸிப் பொருட்கள்
- சில்வர் பொருட்கள்
- பை (Bag) வகைகள்
- கிளாஸ் வகைகள்
- மாபிள் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- பாதணி வகைகள்
- முகக் கவசங்கள் (Mask)
- அன்பளிப்புப் பொருட்கள்
- மணிக்கூடுகள்
- விளையாட்டுப் பொருட்கள்

சில வருட காலமாக இயங்கி வரும் எமது ஸ்தாபனத்தில் விசேட விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

- குடை. மழைக்கவசங்கள்
- தையல் உபகரணங்கள்
- பாடசாலைப் பொருட்கள்
- கவரிங் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

(CS 21206) (3.6)

**சரவணபவன்** பான்ஸி ஹவுஸ்

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்
(செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:- தே.கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354

# கரைவலை பாடுகளை ஒழுங்கமைக்க 'ஜி.பி.எஸ்.' மூலம் எல்லை நிர்ணயம்

## புதிய வர்த்தமானி வெளியிட தீர்மானம்

**மன்னார், ஒக். 22**

**நாடு முழுவதிலுமுள்ள கரைவலை பாடுகள் மற்றும் மீன்பிடித் துறைகளை ஜிபிஎஸ் தொகுதி மூலம் எல்லை நிர்ணயிக்கப்பட்டு புதிய கரைவலை ஒழுங்குவிதிகள் உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது என கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜே.கஹவத்த ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:

நிலஅளவைத் திணைக்களம் மூலம் நாடு முழுவதிலும் செயற்படுத்தப்படும் சகல கரைவலை பாடுகள் மற்றும் துறைகள் ஜிபிஎஸ் தொகுதி மூலம் அளவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த அளவீட்டு நடவடிக்கையின்போது நிலஅளவைத் திணைக்களத்துக்கு ஏற்படும் செலவின நிதியை கரைவலை உரிமையாளர்களிடம் அறவிட இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கரைவலை பாடுகள் அமைந்துள்ள அந்தந்த பிரதேசங்களின் பிரதேச செயலாளர்களால் அளவீட்டுக்கான விண்ணப்பம் நில அளவைத் திணைக்கள தலைமை அலுவலகத்துக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தின் பிரதி கடற்றொழில் பணிப்பாளர் திணைக்களம் மற்றும் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இதேவேளை இந்த நடவடிக்கைக்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சும் இணக்கம் தெரிவித்துள்ளது- என்றுள்ளது. (ச-60)

## வாசிப்பு மாத போட்டிகள்

யாழ்.ஒக். 22

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் கீழ் இயங்கும் மானிப்பாய், ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய பொது நூலகங்களில் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய வாசிப்பு மாத போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

அதற்கமைய பொது நூலகங்களில் "அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு" எனும் தொனிப்பொருளில், வாசகர் மற்றும் மாணவர்களிடையே பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்னும் பகுதிகளில் கட்டுரை, பேச்சு, கவிதை, பொதுஅறிவு மற்றும் பட்டிமன்றம் போன்ற போட்டிகளும், முன்பள்ளி மாணவர்களுக்கு கதைகூறல், நிறம் தீட்டுதல், எண்கள் மற்றும் எழுத்துகளை இணைத்தல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளன. (ஓ-14-125)

## சிறுநீரகம் தேவை

0 + குறூப் வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
077 284 6784, 076 357 6536
(cs 21028) (2.6)

## காணி விற்பனைக்கு உண்டு

2 பரப்புக் காணி கோப்பாய் கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு.
071 8712 725

## மணமகன் தேவை

டென்மார்க்கை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட சட்டத்தரணிப் பெண் பிள்ளைக்கு 33 - 38 வயதுக் கிடைப்பட்ட பட்டப்படிப்பு முடித்த மணமகனை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு: 074 357 7310
(Normal Call / whatsapp)
(cr 7020) (2.6)

## வாடகைக்கு

யாழ்பாணத்தில் மாடி வீடு வாடகைக்கு உண்டு. ஒவ்வொரு மாடியும் 4 அறைகளும், 2 குளியல் அறைகளும், சமையல் அறையும், நீண்ட L வடிவ பொது அறையும் கொண்டது. புங்கங்குளம் ரயில் நிலயம் அருகாமையில் அமைந்துள்ளது. வாடகை பேசித் தீர்மானிக்கப்படும். கம்பனிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு மின்னஞ்சல்:
santhikesavan@gmail.com
074 351 2751
(cs 47138) (2.6)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- **பார்வையிடும் நேரம்**

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு**

- ✓ ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- ✓ யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- ✓ 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- ✓ பார்வையிடும் நேரம்:

காலை 06.00 - மாலை 6.00

**தொடர்பு: 077 911 6983**
**076 755 8606**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.